
# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
ஆவணி 7
றம்ழான் பிறை 18
புதன் (23-8-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 24

விலை சதம் 35


## 'எட்டு இருத்தல் தானியம்' என்றவர்கள் எட்டி உதைக்கிறார்கள் ஏழை வயிற்றிலே'

சாதாரண ஏழை மக்களின் அன்றாட உணவுப் பொருளான மா, பாண், ஆகியவற்றின் விலையை நான்காவது தடவையாகக்கூட்டிமீண்டும் அவர்களது வயிற்றிலடித்திருக்கிறது யூ. என். பி. பாஸிஸ ஆட்சி.

1977 யூலை 21ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிகார பீடத்துக்கு வந்த யூ. என். பி. ஆட்சி கடந்த ஓராண்டுக்கிடையில் மா, பாண், ஆகிய ஏழை மக்களின் உணவுப் பொருட்களின் விலையை மூன்று தடவைகள் அதிகரித்துள்ளனர். இப்போது நான்காவது தடவையாக இப்பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

60 சதமாக்கப்பட்ட ஒரு இருத்தல் மாவின் விலை பின்னர் படிப்படியாக 72 சதமாகி, 82 சதமாகி இப்போது (21-8-78) ஒரு ரூபா பன்னிரண்டு சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 80 சதமாக விருந்த ஒரு இருத்தல் பாணின் விலையும் ஒரு ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. முந்திய ஆட்சியை 'கசெட்' ஆட்சியென்று கேலி பேசியவர்கள்இப்போது தாமே கெசட்டில் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

இத்திடீர் மாவிலையேற்றத்தினால். கொள்ளை லாபமடிக்கும் பதுக்கல் முதலாளிகளே அரசாங்கத்தைப் பாராட்டுகிறார்கள்; ஏழை மக்கள் "ஜே. ஆர் ஆட்சியே ஒழிந்து போ" என்று சபிக்கிறார்கள்.

எட்டு இருத்தல் தானியம்தருவோம் என்பவர்கள் எட்டி உதைக்கிறார்கள்ஏழை வயிற்றிலே— இவர் தம் கொட்டம் அடக்குவதெப்போ என்று குடல்கருக கும்பியெரிய குமுறிக்கொண்டிருக்கிறார்கள் ஏழைப் பாட்டாளி மக்கள்.

● புதிய அரசியலமைப்புக் கொண்டாட்டங்கள்!

## பகிஷ்கரிப்பதற்குதயாராகிறது தமிழ் மாணவ சமுதாயம்!

செப்டம்பர் ஏழாம் திகதி, தமிழ்ஈழமக்களின் சம்மதமின்றித் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும்நாளில், தமிழ் ஈழத்தில் சிங்கள ஏகாதிபத்திய ஆட்சி ஏற்பாடுசெய்யும் அனைத்துக் கொண்டாட்டங்களையும் தமிழ்மக்கள்— குறிப்பாக தமிழ் மாணவ சமுதாயத்தினர்—பகிஷ்கரிப்பார்கள். இதற்கான ஏற்பாடுகளில் தமிழ்மாணவர் அமைப்புக்களும், தமிழ் இளைஞர் அமைப்புக்களும்தற்போது தீவிரமாகஇறங்கியுள்ளன.

இதே சமயம் அன்றைய தினம்தேசிய அரசுப்பேரவையில் நடைபெறும் வைபவம் எதிலும் கூட்டணி பா. உக்கள் கலந்துகொள்ளாமல் அவற்றைப் பகிஷ்கரிப்பார்கள் என்று தெரிகிறது.

செப்டம்பர் ஏழாம் திகதி சிங்கள சிறீலங்காவின் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வருகிறது. இதையொட்டி தமிழ்ஈழத்தில் பல்வேறு கொண்டாட்டங்களையும் நடத்துவதற்கு சிங்கள சிறீலங்கா ஆட்சி ஏற்பாடுகளை செய்து வருகிறது. குறிப்பாகத் தமிழ் ஈழத்திலுள்ள பாடசாலைகளில் சிங்கள சிறீலங்காவின் தேசியக் கொடியேற்றுதல், தேசிய கீதம் இசைத்தல் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு கல்வியமைச்சுதிட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகளில் தமிழ் மாணவ மாணவியர் பங்குபற்றுது. அவற்றைப் புறக்கணிக்கவிருப்பதுடன் முடிந்தால் தமிழ் ஈழத்தேசிய கீதத்தை இசைக்க விருக்கின்றனர்.

இதுமட்டுமன்றி தமிழ் ஈழத்தில் அதே தினத்தில் நடைபெறும் ஏனைய அரசாங்க விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும் தமிழ் பொதுமக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென வேண்டுகோள் விடப்படும் என்று தெரிகிறது.

இப்பகிஷ்கரிப்பு ஏற்பாடுகள் குறித்து தமிழ் இளைஞர் பேரவையும், தமிழர் விடுதலைக்கூட்டணியும்27-8-77ல் யாழ்ப்பாணத்தில் கூடி இறுதி முடிவுகளை எடுக்கும்.

### இவ்வார 'ஜோக்'

"மாவட்ட மந்திரிய மைப்பு ஒரு சுயஆட்சி முறையாகும். இதற்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் கோரும் தமிழ் ஈழத்திற்கும் அவ்வளவு வேறுபாடு கிடையாது."

நீதியமைச்சர் தேவநாயகம் (வீரகேசரி 15-8-78)

## கண்டியில் தமிழர் கடை அடித்து நொருக்கப்பட்டது!

கண்டி— கொழும்பு வீதியிலுள்ள தமிழர் உணவுக் கடையொன்று சிங்களக் காடையர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இப்படி அடித்து நொருக்கப்பட்டது ஓர் சைவ உணவு விடுதியாகும்.

கண்டி பெரஹராவுக்கு சென்ற "பௌத்த யாத்திரீகர்கள்" சிலர் குறித்த சைவத் தமிழ்க் கடையில் உணவு அருந்திவிட்டு, பணம் கொடுக்க மறுத்தனராம். உணவு விடுதி உரிமையாளர் பணம் கேட்ட போது, சண்டித்தனத்தில் இறங்கினராம்; சைவ உணவு விடுதி முற்றாக அடித்து நொருக்கப்பட்டு அங்கிருந்த தளபாடங்களும் சேதப்படுத்தப்பட்டன. கடையை நோக்கி, சரமாரியாக போத்தல்களும் கற்களும் வீசப்பட்டதுடன் தமிழர்களை அவமதிக்கும் வார்த்தைகளும் தாராளமாக பயன்படுத்தப்பட்டனவாம்.

தமிழன் இனியும் சிங்கள நாட்டில் வாழலாம்; சிங்களவர்களோடு ஐக்கியமாக வாழலாம் என்று கூறுவோருக்கு இது சமர்ப்பணம்;

## 'சன்சோனி ஆணைக்குழு சாட்சியங்கள்"

### ஆங்கில வார இதழுக்கு பெரும் கிராக்கி!

ஆகஸ்ட் 19ம் திகதி முதல் வெளிவரத் தொடங்கியிருக்கும் "சன்சோனி ஆணைக்குழுச் சாட்சியங்கள்" எனும் ஆங்கிலவார இதழுக்கு தமிழ் மக்களிடையே பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. 1977 ஆவணி-புரட்டாதியில் நடந்த சிங்கள இனவெறியாட்டம் பற்றிய உண்மைச் செய்திகளை அறிவதற்கு இந்த இதழைப் போட்டி போட்டுக்கொண்டு ஏராளமானோர் வாங்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

1977 ஆவணி மாதம் 19ம் திகதி நாடெங்கும் இனக் கலவரம் உச்சக்கட்டத்திலிருந்த நேரம். தமிழர்கள் படுகொலைகளுக்கும், தீவைப்புக்களுக்கும்; கொள்ளைகளுக்கும் ஆளாகி, குய்யோமுறையோ என்று அரற்றியாடி அகதிகளாகி முகாம்களில் அடைக்கலம் தேடிய நேரம். ஓராண்டுக்கு முன்பு நடந்த இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் முறையில் இந்த ஆண்டு ஆவணி 19ல் "The Sansoni Comission Evidence" என்ற ஆங்கில வார வெளியீட்டின் முதலாவது இதழ் வெளிவந்தது.

1978ம் ஆண்டு பெப்ரவரி 8ம்திகதிஇனக்கொலை நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரணை நடத்திவரும் வரலாற்றுப் புகழ்பெற்ற 'சன்சோனி ஆணைக்குழு' தனது முதலாவது விசாரணையை யாழ்ப்பாணத்தில் தொடங்கியது. அன்றுமுதல் சன்சோனி ஆணைக்குழுமுன் வெளியிடப்பட்ட கண்ணைக்குளமாக்கும் விதத்தில் சாட்சிகள் கூறிய பயங்கரச்சம்பவங்கள். சட்டத்தரணிகளின் சட்ட வாதங்கள் குறுக்குவிசாரணைகள், ஆணையாளர் சன்சோனியின் குறிப்புக்கள் போன்ற சுவையான விபரங்களையெல்லாம் தாங்கி அதிகாரபூர்வமான அறிக்கையாக — ஒவ்வொருவரும் பேணிப் பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டிய பெட்டகமாக வெளிவர ஆரம்பித்திருக்கிறது இந்தப் புதிய ஆங்கில ஏடு. முதல் இதழில் திரு. சாம். கதிர்காமர் கியூ.சி, கே. என். சொக்சி, இ, பாலசுப்பிரமணியம், ஆகிய சட்டத்தரணிகளின் சட்ட வாதங்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் சாட்சிய விபரம் ஆகியன இடம்பெற்றுள்ளன; அத்துடன் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கலவரகாலத்தில் வெளியிட்ட செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

அடுத்த இதழில் (26.8.78) திரு. அமிர்தலிங்கம், யாழ் பா.உ. வெ; யோகேஸ்வரன் ஆகியோரின் சாட்சியங்கள் வெளிவரவுள்ளன. தனிப்பிரதியின் விலை ஒரு ரூபா மட்டுமே. இந்த ஆங்கில இதழ் ஒவ்வோர் சனிக்கிழமையும் வெளிவருகிறது.


● Now on Sale:

The Sansoni Commission Evidence

A WEEKLY PAPER

Every Saturday beginning August 19.

A Full, authentic account of the proceedings containing material hitherto not published, and not likely to be published in the future in any other medium. Please reserve your copies with your news agent to ensure your regular reading.

Price Re. 1/- only

News Agents please contact:-

Manager,
Ceylon News Papers Ltd.
194A, Bandaranayake Mawathe,
Colombo-12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(20.8.78 ஞாயிறு இதழின் தொடர்ச்சி)

# ஆவரங்கால் மாநாடு- சில சிந்தனைகள்

## சர்வசன வாக்கெடுப்பு

"மக்கள் கருத்தறிந்துதேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மார்க்கமாகச் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று இந்த அரசு புதிய அரசமைப்புச்சட்ட மூலத்தில் தெரிவித்திருக்கிறது. தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தமிழர் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்"

—இது கூட்டணித் தலைவர் திரு. சிவா அவர்களின்வேண்கோள். தமிழீழத்தில் மட்டும் பொது வாக்கெடுப்பு நடாத்த வேண்டுமென்ற தலைவரின் கோரிக்கை பெரிதும் வரவேற்கத் தக்கது.

ஆனால்அரசைப்பொறுத்த வரையில் தமிழீழத்தைச்சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமைப்பட்ட கூறாகவே கருதுகிறது. எனவே, தமிழீழத்துக் கெதிராகச் சிங்கள மக்களைத் தூண்டிவிடும்போராட்டத்தின் ஒரு பகுதியாகவே அரசு பொதுசன வாக்கெடுப்பை நடாசத்தும்என்பதில் ஐயமில்லை;

பொதுசனவாக்கெடுப்பை அகில இலங்கையிலும் நடத்தி "தமிழீழத்துக்கு"ஆதரவாக ஏறத்தாழ இரண்டு வீதவாக்குகளே கிடைத்துள்ளது. எனவே "இலங்கை மக்கள் தமிழீழத்தை எதிர்க்கின்றனர்" என்று பிரச்சாரம் செய்வதற்கே பொதுசன வாக்கெடுப்புப் பயன்படுத்தப்படும்.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்திற்கான சர்வசன வாக்கெடுப்பாகப் பிரகடனஞ்செய்தது அத்தேர்தலில் கூட்டணி ஏறத்தாழ 52 வீத வாக்குகளைத் தமிழீழத்திற் பெற்றது: எனினும் அரசும்,வண.பிதா.திசாபால சூரியா போன்றவர்களும்சிங்கள- ஆங்கில- தமிழ்ப் பத்திரிகைகளும் தமிழீழக்கோரிக்கையை இலங்கை மக்கள் நிராகரித்து விட்டதாகப்பிரசாரம் செய்தனர். சிங்களமக்களைத் தமிழருக்கு எதிராகத் தூண்டிவிட்டு வரலாறு காணாத இனக்கொலையை வெற்றிகரமாக நடாத்தித் தமிழரை விரட்டி அடித்தனர்.

அகில இலங்கை அடிப்படையில் தமிழீழ வாக்கெடுப்பு நடைபெற்றால் தமிழீழத்தில் உள்ள ஒவ்வொரு தமிழனும் அதனைப் பகிஷ்கரிக்க அணி திரள வேண்டும்.

### தேசிய கீதம்

உருவாகிய ஒரு நாட்டினது அல்லது உருவாகப் போகும் ஒரு நாட்டினது உயிர் மூச்சாக, எழுச்சியின் சின்னமாக அமைவது அதன் தேசிய கீதமாகும். புனிதமான தேசிய கீதத்தை அதன் குடிமக்கள் அனைவரும் உயிரினும் மேலாகப் போற்றவேண்டும். மலரவிருக்கும் தமிழீழத்தின் தேசிய கீதமாக "வாழ்க ஈழத் தமிழகம்..." என்ற பாடல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பாடல் இன்று எங்கும் ஒலித்து எழுச்சியை ஊட்டி வருகிறது. ஆவரங்கால் மகாநாட்டின் இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் தொடக்கத்தில்தமிழீழ தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அப்போது அங்குதிரண்டிருந்த பல்லாயிரம் மக்கள் எழுந்து நின்றுபக்திசிரத்தையோடு தமிழீழ அன்னையைப் பணிந்தனர்.

அப்போது அங்கு வந்த சிலர் தேசிய கீதம் ஒலிக்கப்பட்ட நேரத்திலேயே கூப்பாடு போட்டுக் குழப்ப விளைந்தனர். தேசியப் பேரவை உறுப்பினர்கள் சிலரின் போக்கிலும் போராட்டம் தாமதமாவதிலும் சில இளைஞர்கள் விரக்தி அடைந்திருக்கலாம். ஆனால், தேசிய கீதத்தை மதிக்காது கூச்சல் போடுவது அதற்கு வழியாகாது.

அறிவை அடகு வைத்துவிட்டு உணர்ச்சிவெறி கொண்டியங்கும் பொறுப்பற்ற இளைஞர்களால் தமிழீழப் போராட்டத்திற்கு எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை. இளைஞர்கள் அறிவு நிலையில் நின்று செயற்படவேண்டும்.

தலைவர்கள் நெறியில் நம்பிக்கை இழந்தவர்கள் தலைவர்களை எதிர்த்துப் போரிடுவதற்குத் தமது சக்தியை வீணாக்குவதை விடுத்து அரசுக்கு எதிராகத் தமது போராட்டத்தை நடத்த முன்வர வேண்டும்.

காந்தி வழியை விரும்பாத சுபாஸ் சந்திர போஸ் தனி வழி சென்று போராடினாரே தவிர காந்திக்கு எதிராகப் போராடவில்லை. துண்டுப் பிரசுரம் வெளியிடவில்லை. காந்தீயப் போராட்டத்தை விட சுபாஸ் போசின் நெறி நின்றவர்கள் ஏற்படுத்திய சோதனைகளே ஆங்கிலஏகாதிபத்தியத்தை நெருக்குதலுக்குள்ளாக்கிப் பாரத விடுதலைக்கு வழிவகுத்தது என்ற கருத்தை இளைஞர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். கால் நூற்றாண்டாக உரிமை கோரிப் போர் நடாத்திய அகிம்சா மூர்த்தி செல்வாவுக்கு அஞ்சாதசிங்களஏகாதிபத்தியம் இன்று இனந்தெரியாத ஒரு சில இளைஞருக்கு அஞ்சி நடுநடுங்குகிறது.

### தமிழ் மண் காப்போம்

அம்பாறை உருவானது பெரிய சேனநாயக்கா ஆட்சியில். சேருவாவலை உருவானது சிறிய சேனநாயக்கா ஆட்சியில், தர்மிஷ்ட ஆட்சியில் வவுனியா, மட்டுநகர், திருமலைப் பிரதேசங்கள் முற்றாகச் சிங்களமயமாகும் ஆபத்து எதிர் நோக்கி நிற்கிறது. இந்நிலையில் எல்லைப்புறங்களில் தமிழர்கள் குடியேறுவது அவசியம்; இதனைப் பசுமைப்புரட்சி, பொருளாதார அபிவிருத்தி என்ற நிலையில் நிகழ்த்த ஆதிக்க வெறியுடன் மண்ணாசையும் கொண்ட சிங்கள ஏகாதிபத்தியம் அநுமதிக்கப் போவதில்லை புத்தரின் புனித தத்துவத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட காடையர்கள். இரத்த வெறிபிடித்த முப்படை இவற்றின் உதவியோடு பல இன்னல்கள்குடியேறும் இளைஞர்களுக்குஏற்படுத்தப்படும் உடல், பொருள், உடைமை அனைத்தையும் இழக்க அவர்கள் தயாராக நிற்க வேண்டும். குடியேறிய பிரதேசத்திற்கே தம்மை அர்ப்பணிக்கும் குலையாத நெஞ்சுரம் அவர்ப்ளுக்கு வேண்டும்

கண்ணுட்டி இளைஞர்கள் மீது சுமத்தப்பட்ட அபவாதமும், புனையில் குடியேறியவர்களுக்கு ஏற்பட்ட இன்னலும் தலைவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக அமைய வேண்டும்.

வன்னிப் பிரதேசத்தின் சில பகுதிகளில் மண்ணாசை கொண்ட சிலர் காடுகளை வெட்டி ஆட்சிப்படுத்த முனைகிறார்களே தவிர அங்கு குடியேறுவதோ வேளாண்மை செய்வதோ இல்லை. குடியேற முயலும் மலையகச்சகோதரர்களின் குடிசைகளை எரித்தும் துன்புறுத்தியும் வருவதாகக் கூறப்படுகிறது. நில. வளம் மிக்க வன்னியில் இன்று வேண்டப்படுவது மனித வளமே. மலையகத் தமிழர் குடியேறுவதன் மூலமே இதனைச் சாதிக்கமுடியும். ஆகவே வன்னி மக்கள் அவர்களை அரவணைத்து, வாழ்வளித்துத் தமது மண்ணைப் பாதுகாக்க முன்வர வேண்டும்: இல்லாவிட்டால் '77 இல் இடம் பெற்ற இனக்கொலை நாள் தோறும் நடைபெறுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும். அடுத்த தேர்தலில் வவுனியா தெற்கில் ஒருபுதிய சிங்களத் தொகுதி உருவாகிப் பண்டார வன்னியன் காத்த பூமியை வன்னி மக்கள் இழந்து விட நேரும்.

### தீண்டாமை ஒழிக

ஆவரங்கால் மாநாடு தீண்டாமையை ஒழிக்கமுதல்மை கொடுத்துப் போராட்டம் நடாத்த முடிவு செய்துள்ளது. சாதி படிப்படியாகச் செத்துக்கொண்டுவரும் நிலையில் அரசியல் நோக்கங்களுக்காகச் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களதுதமிழ் ஆதரவாளர்களும், தாழ்த்தப்பட்டவர்கள எனப்படட மக்களை ஏனையோரிலிருந்து பிரித்து மோதவிட்டு சாதியமைப்பை உறுதிப்படுத்த முனைந்து வருகின்றனர். இந்நிலையில் ஆரம்பத்தில் தமிழரசுக்கட்சியும் பின்னர் தமிழர் கூட்டணியும்இந்தமுயற்சியைத் தடுத்து தாழ்த்தப்பட்டவர்கள் எனப்படுவோரை ஏனையோரும் இணைந்து வாழச் செய்யும் முயற்சியை மேற்கொண்டனர்.

தாழ்த்தப்பட்டவர்களைத் தனியாகப் பிரித்தெடுத்துத் தனித்தொகுதி அமைக்கும் முயற்சியில் இடதுசாரிகள் ஈடுபட்டபோது கூட்டணி அதனை ஏற்காது அவர்களுக்கும் சரியாசனம் தரமுன் வந்தது. அதன் பயனாக; இன்று உடுப்பிட்டித் தொகுதி விளங்குகிறது. இடதுசாரி அலை ஓய்ந்த நிலையில் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டணியின் கீழ் அணிதிரண்டு நிற்கின்றனர். அவர்களை எவ்வகையிலும் ஒடுக்குதல் அநீதி என்பதை நாம் உணர வேண்டும். ஆலயங்கள் தான் இன்றுதீண்டாமையின் உறைவிடங்களாக உள்ளன. ஆலய தர்மகர்த்தாக்களும் உயர் சாதியினர் எனப்படுவோரும் சைவசமயம் சாதிபேதத்தை நிராகரிக்கிறது என்ற உண்மையை உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்கள் எனப்படுவோருக்கு உயர் சாதியினர் எனப்படுவோர் இழைக்கும் அநீதிகள் ஒவ்வொன்றும் சிங்கள ஆக்கிரமிப்பு வாதிகளின் செயல்களை நியாயப்படுத்துபவையாக அமையும். நாம் விடுதலைக்கு அருகதையற்றவராகி விடுவோம்.

"தமிழ் மக்கள் தாழ்த்தப்பட்டோர் என்று தாங்கள் தள்ளி வைத்திருக்கும் மக்களுக்கு விடுதலை அளிக்கமுன்வந்தாலன்றித் தமிழ் பேசும் மக்கள் அரசியற் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கில்லை" என்று மூதறிஞர் செல்வா கூறினர், அதனை உணர்ந்து சாதிக்குச்சாவு மணி அடிக்க விரைந்து வாருங்கள்!

—காங்கேயன்

## பொலிசாருக்கு நன்றி கூறுகிறார் அருளப்பு ஆசிரியர்!

"நான் இப்பூமியில் பிறந்து 65வருடகாலததில்பொலிஸ் நிலையத்தில் கால்வைத்து அறியேன் அப்படியே கைதாகிய இளைஞர்களும்,பொலிஸ் நிலையத்தில் எக்காரணங் கொண்டும் கால்வைத்தறியாதவர்கள். இவர்களில் ஒருவர் கமத்தொழில் பொறியியலாளர் ஏனையவர்கள் சர்வகலாசாலையில் படிக்கிறவர்களும். படிக்கத்தகுதியானவர்களும்.

இவர்கள் எனது கமத்திலுள்ள20 அகதிக் குடும்பங்களுக்கு உதவிசெய்யும் நோக்கத்தோடு பொருளாதார விருத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள்.

இந்தநிலையில் பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைது செய்து அடித்துச் சித்திரவதை செய்து சிறையில் அடைத்துத் துன்புறுத்தி. ஈழநாட்டு விடுதலை இயக்கத்திற்குப் பயிற்சி அளித்துள்ளார்கள்: அவர்களுக்குநன்றி கூறுகிறேன்.

இவ்வாறு அண்மையில் விளக்கமறியலிருந்து பிணையில் விடுதலைசெய்யப்பட்ட கண்ணுட்டியைச் சேர்ந்த இலைப்பாறிய ஆசிரியர் திரு. யோ.அருளப்பு தமது சிறை அனுபவம் பற்றி கூறியுள்ளார்

## மனிதன் கல்விச் சேவை

1979 ஏப்ரில் கபொ.த. உயர்தரப் பரீட்சை எடுக்கவுள்ள விஞ்ஞான மாணவர்கள் நலனகருதி 'மனிதன் கல்விச்சேவை' அஞ்சல்வழிக் கல்விச்சேவையைத் தமிழ் ஈழ மாணவருக்கென ஆரம்பித்துள்ளது. பௌதீகம், இராசாயனம், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுக்கான உதவிக் குறிப்புகளும், பயிற்சி வினாக்களும் பல்கலைக்கழக மாணவர்களால் தயாரிக்கப்பட்டு 12 தொகுதிகளாக செப்ரம்பர் மாதம் முதல் மாதமிரு தடவை அஞ்சல் வழியாக அனுப்பிவைக்கப்படும். இதனால் பயன்பெற விரும்பும் மாணவர்கள் தமது பாடங்கள் பற்றி விபரங்களுடன் 25 8.78 ற்கு முன்விண்ணப்பிக்க வேண்டிய முகவரி;

மனிதன் கல்விச் சேவை,
அஞ்ச என் 81,
யாழ்ப்பாணம்.

★ அச்சு, அஞ்சல் செலவுகள் மட்டும் அறவிடப்படும்.

★ தமிழ் ஈழத்தின் கல்வியில் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்தோருக்கும், வறிய மாணவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்;

இப்பொழுது விற்பனையாகிறது!

மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின்

நினைவு மலராக

அன்னாரது அழகிய வண்ண முகப்போவியத்துடன்

சுடர்
CHUDAR

சித்திரை-வைகாசிஇதழ்

விலை ரூபா ஒன்று

## 27-8-78ல் சாதியொழிப்புமாநாடு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புக்குழு திரு. வி.என். நவரத்தினம் தலைமையில் 13-8-78 ஞாயிறு மாலை கூடி பின்வரும் தீர்மானங்களை எடுத்தது.

● சமூக ஏற்றத்தாழ்வு காட்டும் பொது வைபவங்கள் எதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கலந்து கொள்ளக் கூடாது. அவற்றைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

● கூட்டணியின் மூலக் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரடங்கிய மகாநாடு ஒன்றை ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தித் தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சமூகக் குறைபாடுகள் ஒழிப்புத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வழிவகைகளை ஆலோசிப்பது;

● சுவரொட்டி மூலமும், தீண்டாமை யொழிப்பு சுலோகங்களை வெளியிட்டு ஒரு மாதகாலம் தொடர்ந்து பிரசாரம் செய்வது.

● அரசியற்கட்சி சார் பற்ற சகல சமயத் தலைவர்கள் பிரமுகர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 30 பேர் கொண்ட உபகுழு ஒன்றை அமைத்து அதன் மூலம் சமூகக் குறைபாடுகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதிய அரசியலமைப்பிலும் தமிழனுக்கு சமத்துவமில்லை!"

## தமிழினத்தைத் தாழ்த்தும் சட்டங்கள் அப்படியே நீடிக்கின்றன

## கொழும்புக்கருத்தரங்கில் அமிர் விளக்கம்!

இன்று கொண்டு வரப்பட்டிருக்கும் அரசியலமைப்பு எமது நிலையில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வில் ஏதாவது முன்னேற்றத்தை இந்த அமைப்பு ஏற்படுத்தியுள்ளதா என்று கேட்டால் "இல்லை! இல்லை!! இல்லை!!!" என்றுதான் பதிலளிப்பேன்.

இந்த அரசியலமைப்பின் 2ம் விதி இந்த நாடு தமிழர்களை ஆளப்படும் இனமாக்கியுள்ள ஒற்றையாட்சிஅமைப்பைக் கொண்டதாக இருக்கும் என்கிறது. 9ம் விதி பௌத்தமதம், முதலிடம் பெற்ற மதமாக அரசினால் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய மதமாக இருக்கும் எனக் கூறுகிறது. 18ம் விதி இந்த நாட்டின் ஆட்சி மொழியாக சிங்களமொழி இருக்கும் என்கிறது. இவை மட்டுமல்ல குடியுரிமையில் கூட 1948ம் ஆண்டு சட்டங்கள்தான் இந்த நாட்டின் குடியுரிமைச் சட்டமாக விருக்கும் என்கிறது.

முந்திய அரசியலமைப்பில் நாம் எதிர்த்த விடயங்கள் யாவும் அப்படியே இந்த அரசியலமைப்பிலும் இருக்கின்றன,

### குடியுரிமை

1948ம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் என்ன கூறுகிறது. 1948ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கு முன்பு இலங்கையில் பிறந்த ஒருவன் குடியுரிமை கோரினால் அவனது தந்தையும் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும். 1948ம் ஆண்டு செப்ரம்பர் மாதத்திற்கு பின்பு பிறந்த ஒருவன் குடியுரிமை கோரினால் அவனது தந்தையும் பாட்டனும் இலங்கையில் பிறந்தவர்களாக இருக்கவேண்டும். இச்சட்டம் அப்படியே சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### மொழியுரிமை:-

புதிய அரசியலமைப்பு சிங்களம் மட்டுமே அரசகரும மொழி என்கிறது. தமிழும் சிங்களமும் தேசிய மொழிகளாக இருக்கும் எனக் கூறுகிறது. 1958ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ் மொழி உபயோக சட்டமானாலும் சரி 1966ம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டமானாலும் சரி 1978வரை சட்டத்தில்தான் இருந்தன. ஆனால் நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டமோ நடைமுறையில் இருந்து வருகிறது:

1978ம் ஆண்டு கொண்டு வரப்பட்டுள்ள இந்த புதிய அரசியலமைப்பில், தமிழ் மொழி பற்றிய 1966ம் ஆண்டின் விதிகள் ஏட்டளவில் ஏற்கப்பட்டுள்ளது; தமிழ் மொழிகள் பற்றிய இந்த விதிகளை நடைமுறைப் படுத்துவதாயின் அரசாங்க ஊழியர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இதைத்தான் 1965ம் ஆண்டு டட்லி சேனநாயகாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் நாம் வற்புறுத்தினோம். அப்போது டட்லி சேனநாயகா இதை ஏற்றுக் கொண்டு, 1964ம் ஆண்டு பாணந்துறையில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் தேசிய மகாநாட்டில் இரு மொழிக் கொள்கையை மகாநாடு ஏற்றுள்வதாகவும் சகல அரசாங்க ஊழியர்களும் இரு மொழிகளும் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். ஆனால் நடைமுறையில் எந்த சிங்கள அரசாங்க ஊழியர்களும் தமிழ்படிக்கவேண்டும் என சட்டம் இயற்றவில்லை.

அதுமட்டுமல்ல 1966ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ் மொழிபற்றிய விசேட ஷரத்துக்களை நடைமுறைப் படுத்த எதுவித நடவடிக்கையும் எடுக்க துணியவுமில்லை. இனிமேல் இவர்களுக்கு துணிவு ஏற்படப் போவதுமில்லை. சட்டத்தில் எழுதி வைத்துவிட்டால் போதாது அவற்றை நடைமுறைப் படுத்த வேண்டியவர்கள் அரசாங்க ஊழியர்களே! ஆனால் நடைமுறைப்படுத்தப்படுமோ? என்பது என்றுமே கேள்விக் குறியாகவே இருக்கும்.

### போதனமொழி

அதுமட்டுமல்ல — தாய் மொழியே ஒரு பிள்ளையின் கட்டாய போதனமொழியாக இருக்கவேண்டுமென்று ஐ. நா. பிரகடனம் கூறுகிறது. இதை நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறோம். போதனமொழி தாய்மொழியே என்பதற்கு சட்ட உத்தரவாதம்வேண்டுமென்றோம். புதிய அரசியலமைப்பிலும் தாய்மொழியே கட்டாய போதனமொழியென்பதற்கு உத்தரவாதம் தரப்படவில்லை. சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில்எந்தமொழியை விரும்பினாலும் போதனமொழியாகயாரும் கொள்ளலாம் என்று புதிய அரசியலமைப்பு கூறுகிறது. காலப்போக்கில் தமிழர்கள் சிங்களத்தை போதனமொழியாக ஏற்கக் கூடும் என்ற சூது எண்ணத்துடனேயே இவ்வாறு போதனமொழிப் பிரச்சினை பொதும்பலாக விடப்பட்டுள்ளது. கட்டாய தாய்மொழிப் போதனைக்கு உத்தரவாதம் தரப்படவில்லை.

### சமத்துவம் பற்றிய வாய்ப்பேச்சு:-

இப்பொழுது எல்லோரும் சமத்துவம் பற்றிப் பேசுகிறார்கள். சிறில் மத்தியூ கூட இலங்கையில் சிங்களவர், தமிழர். இஸ்லாமியர், பறங்கியர் அனைவரும் சமத்துவமாக வாழ வேண்டுமென்கிறார். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டிய காவல்துறையினரே கடந்த ஆவணியில் தமிழர்களை அடிமைகளாக அடித்து உதைத்து சித்திரவதை செய்தனர். ஏனெனில் தமிழனுக்கு உரிமையில்லை என எண்ணும் வகையில் அவர்கள் வளர்த்து விடப்பட்டுள்ளார்கள். இங்கே சட்டம், நீதியைப் பொறுத்தவரையில் சமத்துவம் இருக்கிறதா?

சிங்கள ஊழியர்கள் சிங்களத்தில் படித்து வேலையில் சேர்கிறார்கள்; வேலையும் நிரந்தரமாகிறது. தமிழ் ஊழியர்கள் தமிழில் படித்து வேலையில் சேர்ந்தாலும் 3வருட காலத்துள் சிங்களத்தில் சித்தி பெறுவிடின் அவர்களை வேலையிலிருந்து நீக்குகிறார்கள். அங்கே சமத்துவம் இருக்கிறதா?

அண்மையில் ஹல் துனேயாவிலிருந்து 8 குடும்பங்களின் சார்பில் ஒருவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்த 8 குடும்பங்களும் சிங்களவரால் துன்புறுத்தப்படுவதாகவும் தாம் தூசிக்கப்படுவதாகவும் துன்பப்படுவதாகவும் தமக்கு வடபகுதியில் காணி பெற்றுத் தருமாறும் தாம் இனிமேல் அங்கு வாழ முடியாதென்றும் குறிப்பிட்டு எழுதினார். இந்த நிலையில் சமத்துவம் காணப்படுகிறதா?

# யாழ்நகரிலும் சாதி வெறியா?

யாழ்நகரின் மத்தியில் ஒரு விநாயகர் ஆலயம். சிங்கப்பூரில் வாழ்ந்து இலங்கைக்குத் திரும்பிய ஒரு கற்ற, நாகரிகமானசெல்வந்தகுடும்பத்தவரால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அவ்வாலயம். ஆலயத்தைமருவிய காணியில் ஒரு நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த ஒரு இலிகிதரின் குடும்பம்இருக்கிறது அவர்களுக்கு பல வருடங்களாகியும ஒரு புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை. பல வைத்திய முறைகளைக் கையாண்டும், பிரபல தெய்வத் தலங்களுக்கு நேர்த்தி வைத்தும் பிள்ளைப்பாக்கியம் கிடைக்கவில்லை. கடைசியில் தங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் விநாயகரில் ஒரு நேர்த்திவைத்தார்கள். விநாயகர் கனவில் தோன்றி அவர்களின் குறைதீர்க்க வாக்களித்தார். அவ்வண்ணமே அடுத்த ஆண்டிலேயே ஒரு புத்திரனைப் பெற்றார்கள். குழந்தைக்கு விநாயகரின் நாமந்தாங்கி ஒரு பெயரையும் சூட்டினார்கள். தங்கள் வேண்டுதல் நிறைவேறினால் விநாயகருக்கு வருடாவருடம் தங்கள் குழந்தைபிறந்த நாளில் இளநீரால் அபிஷேகம் செய்விப்பதாக நேர்த்தியும் எடுத்துக் கொண்டார்கள்.

இவ்வண்ணம் ஒன்பது ஆண்டுகள் உருண்டுவிட்டன. விநாயகருக்கு ஒன்பது அபிஷேகங்களும் மனத்திருப்தியுடன் செய்து முடித்து விட்டார்கள்.

10வது பிறந்ததினம் 1978ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 30ம் நாள் அண்மித்தது. இப்பத்தாவது ஆண்டு பிறந்ததின அபிஷேகத்தை விநாயகருக்கு சற்று விமரிசையாகச் செய்ய விரும்பினார்கள். ஆலயத்தை மகர தோரணங்களால் அலங்கரித்து மேளதாளத்துடன் நடாத்த விரும்பினர். நடந்தேறிய ஒன்பது அபிஷேகத்தின் போதும் அத்தம்பதிகட்கு ஆலயத்தில் மனவேதனை உண்டாக்கக்கூடிய நிகழ்ச்சி எதுவும் நடைபெற சந்தர்ப்பம் இருக்கவில்லை. மூன்றுகும்பம்வைத்து அபிஷேகத்துக்குரியவரை பூசகர் தன்முன் இருத்திச் சிலகிரிகைகளைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்ட போதுதான் இத்தம்பதிகளின், கௌரவத்திற்கு, சுமரியாதைக்கு, தன்மானத்துக்கு, மனிதாபிமானத்துக்கு, விநாயகரின் முன்னிலையில் அவ்வாலய உரிமையாளர்களால் சவால் விடப்பட்டது. விநாயக பக்தர்களாகிய அத்தம்பதிகளின் உள்ளங்கள் புண்ணுக்கப்பட்டன,

தங்கள் வாழ்நாட்களுடன் தங்கள் சந்ததிஅஸ்தமித்துப் போகக்கூடாதுதென விநாயகரிடம் வேண்டிநின்று அவரால் இரட்சிக்கப்பட்டதற்காக தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்ற மனமுருகி நின்ற தம்பதிகளின் மனத்தைச் சுட்டெரித்தார்கள் ஆலய உரிமையாளர்.

இத்தனைக்கும் அப்பக்தர்கள் செய்த குற்றம்தான் என்ன? எதுவுமில்லை. சிறுபான்மைத் தமிழராகப் பிறந்துவிட்டதைத்தவிர; இதன்காரணமாக அவர்கள் தவப்பயனால் பெற்றெடுத்த பத்து வயதுப் பாலகன் கோவில் மண்டப படிக்கட்டில் இருத்தப்பட்டு அபிஷேகக் கிரிகைகள் அர்ச்சகரால் செய்யப்பட்டது. பக்தி மேலீட்டால் தர்ப்பத்தில் அவ்விநாயகபக்தர்களுக்கு சாதிவெறியரால் செய்யப்பட்ட சதி புலப்படவில்லை. அபிஷேகம் முடிவடைந்தது. ஆலயத்தில் சமூகமளித்த வேறு சிலரால் சுட்டிக்காட்டப்பட்ட போதுதான் உள்ளத்தால் தாழ்ந்த உயர்சாதியினர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் கும்பலின் சூழ்ச்சி விளங்கியது. இருந்தும்கோவில் குழப்பத்தை உண்டாக்கக்கூடாது என்பதற்காக மௌனமாக கலைந்தனர்.

இத்தனைக்கும் மேலாகஇவ்வாலய உரிமையாளர் தமிழர் விடுதலைக் கூட்டணிதேசியப் பேரவைஉறுப்பினர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்றும், அவ்வுறுப்பினரின் மோட்டார்வாகனம் இவ்வாலய உரிமையாளரின் வாசலில் அடிக்கடி தரித்து நிற்பதைக் காணக் கூடியதாக இருப்பதையும் எண்ணத்தான் ஆச்சரியமாயிருக்கிறது.

யாழ்நகர் மத்தியில் இருக்கும் ஒருகற்ற சிறுபான்மைத் தமிழர் குடும்பத்துக்கு இக்கதி என்றால்; ஒருகுக்கிராமத்திலிருக்கும் பாமரச் சிறுபான்மைத் தமிழனின் நிலை எப்படியிருக்கும் என்பதையும் இன்று,- ஆவணி 1977க்குப் பிறகும் இப்படியென்றால், நாளை தமிழ் ஈழத்தில் எம்நிலை எப்படி இருக்கும் என்பதையும் எண்ணவே பயங்கரமாயிருக்கிறது. தமிழ் ஈழம் அமையுமுன்பே சாதிக்கு சாவுமணியடிப்பது தமிழின விடுதலை விரும்பிகளின் கடமை.

— [illegible]





மில்க்வைற் பார் சோப் பெரிய பார் சோப்பாகவும். சிறிய பார் சோப்பாகவும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

10 மேலுறைகளை அனுப்பி அழகிய பொலித்தீன் பாக் ஒன்றை பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்

மில்க்வைற் — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் சட்டத்தினால் தமிழ் அழியும்; சிங்களம் ஓங்கும்!

## சிந்தனைச் சிற்பி விளக்கம்!

"கடந்த பொதுத்தேர்தலில் நடந்த பொது ஜன வாக்கெடுப்பில் சுதந்திரம் தான் நமக்குத்தேவையென தமிழ் மக்கள் தீர்ப்பளித்தனர். சுதந்திரத்தைப்பெறுவதற்கான திட்டங்களையும் தீர்மானங்களையும் ஆக்கி கூட்டணி நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ் ஈழம் அமைப்பதே மக்கள் எமக்கிட்ட கட்டளையாகும். எனவே சிங்கள அரசாங்கம் எம்முடைய சம்மதமின்றி எம்மையும்சேர்த்து, சட்டத்துக்கும் நேர்மைக்கும் புறம்பாக கொண்டு வந்திருக்கும் அரசியலமைப்பில் தமிழருக்கு என்ன கிடைத்தது எது கிடைக்கவில்லை என்று ஆராயத்தேவையில்லை இந்த அரசியலமைப்பு சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுக்கிறது.

"தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ் மொழி சம்பந்தமாக இரு அம்சங்கள் முன்னேற்றம் போலத் தோன்றுகின்றன. போதனுமொழி சம்பந்தப்பட்ட விதிகள் தமிழ் உரிமையை முற்றாக அழிப்பதற்கு இடமளித்துள்ளன. எந்த ஒரு தேசிய மொழியிலும் கல்வி போதனை பெற உரிமையுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் கேட்பது தாய் மொழியில் மட்டுமே கல்வி கற்கின்ற உரிமையாகும், உரிமை உண்டென்று'சட்டத்தில்சொல்லி வைத்தால்மட்டும்போதாது. அதற்கான வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். இல்லாத பட்சத்தில் உரிமையால் பயனில்லை.

"தற்போதைய சட்டத்தின்படி தமிழ் ஈழத்தில் சிங்களப் போதனுமொழிப் பாடசாலைகளைத்தொடங்கத் தடை ஏதுமில்லை; எனவே நடைமுறையில் இச்சட்டத்தால் தமிழ் அழிந்து சிங்களம் ஓங்கும்"

—வணணுர் பண்ணை கலட்டி கருத்தரங்கில் சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை கூறியது.

# ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது
# ஓராண்டுச் சாதனைப் பட்டியல் தனிச் சிங்களத்தில்!

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதென் பார்கள்: அதேபோல, அரசியலமைப்பில் தமிழுக்கு என்னதான் சலுகையளிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டபோதிலும் — மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக நீதியமைச்சர் தேவநாயகம் வாய்ச்சுவட்டில் அடித்தபோதிலும்—நடைமுறையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில்கூட தனிச்சிங்களமே திணிக்கப்பட்டு வருகிறது என்பதற்கு இதோ ஓர் உதாரணம்—

அண்மையில் யூ.என்.பி. அரசாங்கம் தனது ஓராண்டு பூர்த்தியை கொண்டாடியது. இதையொட்டி ஜே. ஆர். ஆட்சியின் ஓராண்டுச் சாதனைகள் பற்றி அவரது படத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கென சில பிரசுரங்கள் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டன. இந்தப் பிரசுரங்கள் தமிழில் வெளியிடப்படவில்லை; தனிச் சிங்களத்தில் பிரசுரிக்கப்பட்டன.

தனிச்சிங்களத்தில் பிரசுரிக்கப்பட்ட ஓராண்டுச் சாதனைப்பட்டியல் பற்றிய விபரங்களைத் தாங்கிய பிரசுரங்கள் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவாம்' இந்த தனிச் சிங்களப் பிரசுரங்களை வடமாகாணத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப் படும்படியும் கோரப்பட்டுள்ளதாம்.

வடக்கில் உள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு மட்டும் இந்தச் சிங்களப்பிரசுரங்களை அனுப்பிவைத்திருக்கும் யாழ் கல்வித் திணைக்களம், தமிழ் மாணவர்களுக்கும் தமிழ் பாடசாலைகளுக்கும் சிங்களப் பிரசுரங்களை எப்படி அனுப்புவதென்றறியாது தடுமாறுகிறதாம்.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின்பேரில் தயாரிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இந்த ஓராண்டுச் சாதனைப்பட்டியலே தனிச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருக்கும்போது, ஏனைய அமைச்சர்கள் தனிச்சிங்களத்தை திணித்தால் அதில் ஆச்சரியப்பட இடமேயில்லை.

அரசியல்சட்டத்தில்என்னதான் மொழிச்சலுகை வழங்கப்பட்டபோதிலும், தமிழ் இனத்தின்மீது குத்தப்பட்டிருக்கும் அடிமை முத்திரை துடைக்கப்படாதவரை, நடைமுறையில் தமிழன் இரண்டாந்தர பிரசையாகவே ஒதுக்கப்படுவான்— அவன் தொண்டைக்குள் சிங்களம் திணிக்கப்படும் என்பதை இது எடுத்துக்காட்டுகிறதல்லவா?

## நல்லூர் தேர் தீர்த்த திருவிழா அஞ்சலியை நீடிக்க கோரிக்கை!

நல்லைத் திருமுருகன் தேர் தீர்த்தத் திருவிழா நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் அஞ்சல் செய்வது வழக்கமாகும். இந் நிகழ்ச்சிகளை வழமையிலும் பார்க்க இரு மணித்தியாலமாவது கூடிய நேரம் ஒலிபரப்ப வழி செய்துதரும்படி யாழ். சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தேர்த் திருவிழா அன்று அதிகாலை 5 மணிமுதல் முற்பகல் 10 மணி வரையாவது ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கையெடுப்பது விரும்பத்தக்கது என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

# தமிழ் நூல்கள் திரைப்படங்கள் ஏற்றுமதி!
## அமைச்சருக்கு பொருளாதார இயக்கம் பாராட்டு

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு இங்குவெளியாகும் தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள், திரைப்படங்களை ஏற்றுமதி செய்வதுபற்றி இந்திய அரசுடன் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பேச்சுவார்த்தை நடத்துவதையிட்டு அவருக்கு பாராட்டுத் தெரிவித்திருக்கிறது தமிழர் பொருளாதார இயக்கம்.

இதுசம்பந்தமாக தமிழர் பொருளாதார இயக்கத்தின் சார்பில் அமைச்சர் முயற்சி வெற்றிபெற வேண்டும் என்றுகோரி அமைச்சருக்கு திரு.க. சச்சிதானந்தன் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். மேலும் தமிழர் பொருளாதார இயக்கம்இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கைவருமாறு:-

தமிழர் பொருளாதார இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள் இதுகுறித்து மகிழ்ச்சியடைகிறோம். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே உள்ள கலை.இலக்கிய தகவல் சாதனங்களின் ஏற்றுமதி இறக்குமதி ஒருவழிப்பாதையாகவே இருந்துவருகின்றது. தமிழ் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளும், பிற மொழிகளிலும் நூல்கள், திரைப்படங்கள், செய்தித்தாள்கள் போன்றவை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகின்றனவேயன்றி இலங்கையில் இருந்து இந்தியாவிற்குச் செல்வதில்லை. இதற்குரிய அடிப்படைக்காரணம்; இந்திய அரசின் இறக்குமதிக் கட்டுப்பாடுகளே.

35 கோடிரூபா பெறுமதியான பொருட்களை நாம் இந்தியாவில் இருந்து தருவிக்கின்றோம். ஒருகோடி பெறுமதியான பொருட்களை நாம் ஏற்றுமதி செய்கிறோம்.இந்த வர்த்தக இடைவெளி நிரப்பப்படவேண்டும்என்ற இலங்கையின் கோரிக்கையை இந்திய அரசுஅசட்டை செய்து வந்துள்ளது. "இலங்கையில் என்ன இருக்கிறது நாம்இறக்குமதி செய்வதற்கு" என்ற மனப்பாங்குடன் நடந்து வந்துள்ளது.

எமது கடல்வளமாகிய சங்குக்கு இந்தியாவில் பெரும் தட்டுப்பாடு உண்டு. அதேபோல, கறுவா, கராம்பு. பாக்கு போன்றசரவலையஉற்பத்திப் பொருட்களுக்கு இந்தியாவில் தட்டுப்பாடுஉண்டு. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தமிழ்த் திரைப்படங்கள், தமிழ்நூல்கள், தமிழ்ச்சஞ்சிகைகள் இவையாவற்றுக்கும் இந்தியாவில் பெரும் 'பசி' உண்டு. இந்திய அரசின் தடையினால் இவை அங்கு கிடைப்பதில்லை.

முன்னெப்பொழுதுமில்லாத அளவு இந்திய ரூபாய் உலகில் மதிப்புயர்வுபெற்று, இந்தியப் பொருட்களுக்கு உலக நாடுகளில் கிராக்கி ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில், இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதில் இந்தியா பின்நிற்க[illegible] அதுவும் இந்தியாவிற்குச் சாதகமான இலங்கைக்குப் பாதகமான வர்த்தக இடைவெளி இருக்கும்பொழுது இந்திய அரசு இலங்கையின் உற்பத்திப் பொருட்களை மேலதிகமாக இறக்குமதி செய்ய இணங்கவேண்டும். சிறப்பாகத் தமிழ் நூல்கள், திரைப்படங்கள் என்பது இலங்கையில் இருந்து இந்தியாவிற்குள் செல்ல உள்ள தடை அகற்றப்படவேண்டும்.

சிங்கள நூல்கள், சஞ்சிகைகள்கூட இந்தியாவில்இருந்து பெருந்தொகையில் இலங்கைக்கு இறக்குமதியாகின்றது. தமிழ் நூல்கள் திரைப்படங்கள் பற்றி விளக்கத் தேவையில்லை. அவை இங்கு வருவதைத் தடைசெய்யக் கூடாது. அதே போல இந்திய அரசும் இலங்கையில் உள்ள உற்பத்திப் பொருட்கள் இந்தியாவிற்குள் வருவதைத் தடைசெய்யக் கூடாது.

தமிழ்த் திரைப்பட நூல். சஞ்சிகை செய்தித் தகவல் சாதனங்களின் வர்த்தகம் ஒருவழிப் பாதையாக அமையாமல் இருவழிப் பாதையாக அமையவேண்டும்.

# யாழ்ப்பாணத்துக்கு பட்டைநாமம்!

## விலைமதிப்புத் திணைக்கள வடபிராந்திய செயலகம் அனுராதபுரத்துக்குப் போகிறது

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்ட விலைமதிப்புத் திணைக்கள வடபிராந்திய அலுவலகம் இப்போது அனுராதபுரத்துக்குப் போகிறது.

பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்ச மேற்படி பிராந்திய அலுவலகம் நிறுவப்பட வேண்டிய இடம் குறித்து ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கென திரு. டி. எல். ஜி. செனவிரத்தின, திரு. எஸ் பி. பாலசிங்கம், திரு. எம்.ரி.டி சேனநாயகா ஆகியோரைக் கொண்ட ஆலோசனைச்சபையொன்றை நியமித்திருந்தது அந்த ஆலோசனைச்சபை, மேற்படி அலுவலகம் நிறுவுவதற்குப் பொருத்தமான இடம் யாழ்ப்பாணம்தான் என்று சிபார்சு செய்திருந்தது.

ஆனல் இப்போது அந்த சிபார்சுதூக்கியெறியப்பட்டு விட்டது. மேற்படி விலைமதிப்புத் திணைக்கள வடபிராந்திய அலுவலகத்தை அனுராதபுரத்திலேயே நிறுவும்படி நிதியமைச்சர் கட்டளையிட்டுள்ளதைத் தொடர்ந்து, குறித்த அலுவலகம் அனுராதபுரத்தில் நிறுவப்பட்டு வருகிறது.

ஜே. ஆரின் தார்மீக ஆட்சியில் சிங்களம் வாழ்கிறது— தமிழ் ஈழம் தாழ்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

## இவர் நீரோ அல்ல; ஜே. ஆர்!

"கோதுமை மாவினதும், பாணினதும் விலை நேற்று நள்ளிரவுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளன."

—வீரகேசரி (21-8-78)

"ஜனாதிபதி முன்னிலையில் பெரஹரா யானைகள் சாகஸ விளையாட்டுக்கள். ஜனாதிபதி யானைகளைத் தட்டிக்கொடுத்து அவற்றுக்கு கரும்பு கொடுத்து மகிழ்ந்தார்."

—வீரகேசரி (21-8-78


## இளைஞர் குரல்

இரண்டாவது இதழ் வெளிவருகிறது.

* புதிய கருத்துகள்
* புரட்சிச் சிதறல்கள்.

காலத்தின் தேவையாக— கனிந்து வருகிறது.

சோரம் போகாதே என்று நேரம் பார்த்துக் கூற வெளிவருகிறது.

இம்மாதம் இருபத்தாரும் திகதி எங்கும் கிடைக்கும்

இளைஞர்குரல்

பக்கங்க்ள் எட்டு, விலை சதம் 60



## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50-00

அரை ஆண்டு ,, ரூ. 25-00

விபரங்களுக்கு!
15, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை கொழும்பு-12 194 ஏ, பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி புதன் கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு! வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org